பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 13 சனிக்கிழமை 27.06.2020 கதிர் 234

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ்.நகரில் சுகாதார அதிகாரிகள் நேற்று நடந்து கொண்ட ஒரு முறை பற்றிக் கேள்விப்பட்ட போது எனது பாடசாலைக் கால அனுபவம் ஒன்று எனக்கு நினைவுக்கு வந்தது.

பள்ளிக்கூட காலத்திலேயே என் வாய் கொஞ்சம் பக்கம் 02 »

# எப்போதுமே கண்டிராத ராணுவ ஆட்சி வருகிறது!

## வடமராட்சியில் வைத்து சுமந்திரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

எந்தக் காலத்திலும் கண்டிராத ஓர் இராணுவ ஆட்சி நாட்டில் ஏற்படப் போகிறது. இது குறித்து நாம் அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்

உடுப்பிட்டி மற்றும் பருத்தித்துறை தொகுதி செயற்பாட்டாளருக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். பக்கம்02 »



## ராஜபக்ஷாக்களின் கொட்டத்தை ஐ.தே.கவினாலே அடக்க முடியும்

### இடித்துரைத்தார் நவீன்



கொழும்பு, ஜூன் 27

ஐக்கிய தேசியக் கட்சியை எவராலும் அழிக்கவே முடியாது என அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ராஜபக்ஷாக்களின் கொட்டத்தை ஐக்கிய தேசியக் கட்சியால் மாத்திரமே பக்கம்02 »

## கருணாவிடம் திரும்பவும் வாக்குமூலம்

மீண்டும் கருணாவிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளதாக குற்றத் தடுப்பு திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பக்கம் 02 »

## கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு வடமாகாண ஆளுநர் விஜயம்

### கல்வித்துறையின் எதிர்காலம் குறித்து ஆராய்வு

கிளிநொச்சி, ஜூன் 27

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டதோடு அந்தந்த மாவட்டங்களின் கல்வித்துறையின் எதிர்காலம் தொடர்பில் ஆராய்ந்தார்.

குறிப்பாக, கல்வித்துறையை முன்னேற்றுவதற்குத் தடையாகவுள்ள விடயங்கள் மற்றும் தேவையான வசதிகள் தொடர்பில் அதீத கரினை செலுத்தியிருந்தார். பக்கம் 02 »

## கருணாவை விசாரிக்க வேண்டும்!

### மன்னிப்புச் சபையும் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 27

இலங்கையின் மூன்றுதசாப்தகால உள்நாட்டுப் போரின் போது பக்கம் 02 »

## முகக் கவசம் கட்டாயம்; மீறினால் தண்டப்பணம்

### பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் இல்லாமல் போகும் வரையில், அனைவரும் முகக் கவசம் அணிவது கட்டாயம் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

அவ்வாறு அணியாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன பக்கம் 02 »

## விசாரிக்க வேண்டிய தேவையில்லை; கருணா மீது வழக்குத் தொடருங்கள்!

### வலியுறுத்துகின்றார் பீல்ட் மார்ஷல் பொன்சேகா

கொழும்பு, ஜூன் 27

கருணா என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் அண்மையில் தெரிவித்த கருத்து பொதுத்தேர்தல் அரசியல் அரங்கின் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது. இந்தநிலையில், கருணா மீது விசாரணையின்றி உடனடியாக வழக்குத் தொடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தினார்.

எனினும், கருணா கூறும் வகையில் 3 ஆயிரம் இராணுவத்தினரை பக்கம் 02 »

## தமிழரை ஏமாற்றி வருகின்றனர் மாறிமாறி வரும் ஆட்சியாளர்கள்

### குற்றஞ்சாட்டுகின்றார் ஸ்ரீகாந்தா





யாழ்ப்பாணம், ஜூன் 27

இந்த நாடாளுமன்றத் தேர்தலானது தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான தேர்தலாகும். முப்பது வருட போர் இழப்புக்களைத் தந்தது. ஆனால், தீர்வுகள் எட்டாக்கனியாகவே உள்ளன. பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் மாறி மாறி தங்களது ஏமாற்று வித்தைகளைக் காட்டி வருகின்றார்கள். இன்றைய ஆட்சியாளர்கள் தீர்வுக்குப் பதிலாக தேசத்தையே பௌத்தமாக மாற்றும் வேலைத்திட்டத்தில் இறங்கி உள்ளார்கள். பக்கம் 02 »

## தன்னைச் சுற்றி இருப்போர் குறித்து கவனமாக இருக்கட்டும் கோட்டா!

### முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 27

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சுற்றியும் பேரம் பேசுபவர்கள் மற்றும் ஒற்றர்கள் இருப்பதால், அவர் அவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

– இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீளம். எப்போது வளவளா என்ற பேச்சும், கிண்டலும், விமர்சனமும். வீட்டின் சாப்பாட்டு மேசையிலும் அது தொடரும். என் தாயார் கண்டிப்பானவர். என் தொண தொணப்பு சாப்பாட்டு மேசை ஒழுங்கைக் குழப்பும். கோபத்தில் சீறினார் அம்மா.

*“டேய்.... வாயை மூடிக் கொண்டு சாப்பிடடா!”* – என்றார் அம்மா.

*“அதெப்படி வாயை மூடிக் கொண்டு சாப்பிடுறது...?”* – என்றேன் நான்.

என் துடுக்குத்தனமான பதில் என் சகோதரங்கள் எல்லோரையும் சிரிப்பில் ஆழ்த்தியது. கோபத்தில் இருந்த அம்மாவையும் கூட.

என் அம்மா கட்டளையிட்ட மாதிரித்தான் சம்பந்தப்பட்ட சுகாதாரப் பரிசோதகர்கள் நடந்து கொண்டிருக்கின்றனர் போலும்.

அந்த உணவகத்துக்குள் போய் சோதித்திருக்கின்றார்கள் அவர்கள்.

முடிந்து வந்து கல்லாப் பெட்டியிலிருந்த முதலாளியிடம் விசாரணை.

உணவகத்துக்குள் 12 பேர் அமர்ந்திருக்கின்றனர். யாரும் முகக் கவசம் அணியவில்லை. முகக் கவசம் அணியாதவர்களை எப்படி உணவகத்துக்குள் அனுமதித்தீர்கள் என்று முதலாளியை நோண்டியிருக்கின்றனர் சுகாதார அதிகாரிகள்.

அவர் என்ன செய்வார்? பாவம்.

*“எழுதிக் கொண்டு போகின்றார்கள். வழக்குப் போடுவார்களோ தெரியவில்லை!”* – என்று பயத்துடன் முழுசினார் அவர்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

உணவகத்துக்கு வருவது சாப்பிட மற்றும் தேநீர் குடிக்க. உள்ளே முகக் கவசத்துடன் அதைச் செய்ய முடியாது.

ஆகவே, உணவகத்துக்கு உள்ளே முகக்கவசம் ஏன் அணியவில்லை என்று கேட்பதற்கோ, அணிந்து வராதவர்களை மறிப்பதற்கோ உணவக முதலாளிக்கு முகாந்திரம் ஏதும் இல்லை. உணவகத்துக்கு வெளியே யாரும் முகக் கவசம் அணியாமை குறித்து உணவக முதலாளி ஏதும் செய்யவும் முடியாது;கேட்கவும் முடியாது.

உணவகத்துக்கு உள்ளே வந்து தேநீர் குடிக்கவும், உணவருந்தவும் அமர்ந்திருப்போர் தாங்கள் முகக் கவசம் அணிந்துதான் வந்தனர் என்பதை நிரூபிப்பதற்காக அதைக் கழுத்தில் தொங்கப் போட்டுக் கொண்டு திரிய வேண்டும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

கொரோனாவும், அதன் பீதியும் ஒழிந்தாலும் கூட, இந்தக் கொரோனாக் கால குழப்பங்கள் குறித்து நீண்ட காலத்துக்கு எழுதுவதற்கு எங்களுக்கு விவகாரம் இருக்கும் போல...!

கோவில் என்றால் ஐம்பது பேர். திருமண வீடு என்றால் நூறு பேர். இப்போது அந்த நூறு பேரை இருநூறு பேராக அதிகரிக்கலாமா என்று சிந்திக்கின்றார்களாம். நல்லது.

இதற்கிடையில் தனியார் டியூஷன் வகுப்புகள் திங்களன்று 29ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இந்த வகுப்புகளுக்கு ஐந்நூறு பேர் வரை உள்ளீர்க்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனுமதித்துள்ளார் என இலங்கை போதனையாளர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆயிரம், இரண்டாயிரம் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளும் இயங்கப் போகின்றன.

தனியார் வகுப்புக்கு வரும் ஐந்நூறு பேரும் கைகளைக் கழுவி, சுத்தம் செய்து, வகுப்பறைக்குள் நுழைவதாயின் கைகழுவும் ஆரம்பத்திலேயே ‘இண்டர்வெல்’ ஒரு மணித்தியாலம் விட வேண்டியிருக்கும்.

எப்படிச் சமாளிக்க போகின்றார்களோ தெரியவில்லை...!

ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

–மின்னல்–

## விசாரிக்க வேண்டிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கொன்றிருக்கவில்லை எனவும், முல்லைத்தீவில் 1,200 இராணுவத்தினர் மாத்திரமே உயிரிழந்தனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இராணுவத்தினரைக் கொன்றார் என அவரே ஏற்றுக்கொண்டுள்ளமையால், விசாரிக்க வேண்டிய தேவை இல்லை. அரை மணித்தியாலத்தில் தீர்மானத்தை எடுத்து அவர் மீது வழக்குத் தொடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

## தமிழுரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

உப்புவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள நேத்ரா உல்லாச விடுதியில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே மேற்படி கருத்தை ஸ்ரீகாந்தா கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

ஐந்து கட்சிகள் உள்ளடங்கலாக முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தலைமையிலே மேற்படி கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. மீன் சின்னத்தில் போட்டியிடும் எமது கட்சி இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சவாலாகவே உருவாகியுள்ளது என்பதைக் கூறித்தான் ஆக வேண்டும்.

இந்தப் பொதுத்தேர்தலானது தமிழ் மக்களுக்கு மிக முக்கியமான தேர்தலாகும். முப்பது வருடப் போர் பல இழப்புக்களை எமக்குத் தந்தது. ஆனால், தீர்வுகள் எட்டாக்கனியாகவே உள்ளன. பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் மாறி மாறி தங்களது ஏமாற்று வித்தைகளைக் காட்டி வருகின்றார்களே தவிர எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இன்றைய ஆட்சியாளர்கள் தீர்வுக்குப் பதிலாக தேசத்தையே பௌத்தமாக மாற்றும் வேலைத்திட்டத்தில் இறங்கியுள்ளார்கள். நாங்கள் நாட்டைப் பிரித்துத் தீர்வு கேட்கவில்லை. நியாயமான தீர்வு ஒன்றையே வேண்டி நிற்கிறோம்.

தொல்பொருளியல் என்ற போர்வையில் விகாரை மயமாக்கும் வேலைத்திட்டங்களிலே அரசு அக்கறை செலுத்துகின்றது. வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களே இன்று அரசின் இலக்காக உள்ளது. தமிழ் மக்களின் அபிலாகைளை எந்தவொரு ஆட்சியாளரும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதே வரலாறு.

இம்முறை தேர்தல் இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளியாக அமைதல் வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அரசுக்கு முட்டுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தைப் பறைசாற்றி வருகின்றனர். தொடர்ந்து பல சந்தர்ப்பங்கள் அமைந்திருந்த போதும் சம்பந்தன் தரப்பினர் தமிழ் மக்களின் பிரச்சசினைகளுக்கு எதுவித தீர்வையும் கொண்டு வரவில்லை. போதாக்குறைக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு தங்களின் ஆதரவு அரசுக்கு உண்டு என்று அவர்கள் கூறி வருகின்றனர்.

ரணில் அரசுக்கும் கூட்டமைப்பினர் முட்டுக்கு கொடுத்தனர். எதிர்க்கடசியாக இருந்து ஒரு மாயாஜாலம் காட்டினர். இவை ஒன்றாலும் இவர்களால் தமிழர் தரப்புப் பிரச்சினையின் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை.

இதற்குள் இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 20 பேர் நாடாளுமன்றம் நுழையவுள்ளனர். சம்பந்தன் பொய்யாகப் பேசி வருகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தால் வெள்ளை வான் கலாசாரம் மீண்டும் உருவாகும் என்றவர்கள் தற்போது இதே ஜனாதிபதிக்கு மூன்றில் இரண்டுக்கு ஆதரவு தருவோம் என்று கூறும் இந்த நடிப்பை தமிழ் மக்கள் இனியும் நம்பி ஏமாறப் போவதில்லை.

19 ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய திரைமறைவில் சதி நடைபெறுகின்றது. அதற்கும் சம்பந்தன் குழுவினர் ஆதரவு வழங்கமாட்டார்கள் என்பதை எவ்வாறு நம்புவது?

எங்கள் மண் எங்களால் ஆளப்பட வேண்டும். குடியேற்றத் திட்டம் என்ற பெயரில் மகாவலித் திட்டத்தின் ஊடாக கபளீகரம் செய்யப்படும் எங்கள் நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியத்தை தாங்கியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். ஒரு புதிய வரலாற்றை நாங்கள் எழுதப் போகின்றோம்.

எனவே, இனியும் எமது தமிழ் மக்கள் நம்பி ஏமாறாமல் உங்கள் அதிகாரத்தை ஏமாற்றுக்காரர்களின் ராஜபோக வாழ்க்கைக்கு தாரை வார்க்காமல் யோசித்து நடந்து கொள்ளுங்கள்.

இந்தப் புதிய கூட்டணி நிச்சயம் தமிழ் மக்களின் உரிமைகளின் அரணாக நிற்கும் – என்றார்.

## எப்போதுமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்று அணி எனத் தம்மைத் தெரிவிப்பவர்களால் குறைந்தது ஐந்து ஆசனத்தையாவது பெற முடியுமா எனவும், அவ்வாறு மாற்று அணி என்று குறிப்பிடுபவர்கள் தமிழ் மக்களை சின்னாபின்னமாக்கிச் சிதைக்கின்றவர்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் ஓர் அரசிய் தீர்வு கிடைக்க வேண்டும் என்று முழுமையாக உழைத்தோம். அதை ஒட்டு மொத்த சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றால் சிங்கள மக்களுக்கு எமது நியாயப்பாடுகளை தெளிவுபடுத்தவேண்டும். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் மக்கள் கேட்பது நியாயம்தானே எனச் சிங்கள மக்கள் உணரும் அளவுக்குத் தலைவர் சம்பந்தர் ஐயா எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற காலத்தில் செயற்பட்டார்.

அண்மையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் ஓர் ஆஸ்திரேலியா ஊடகம் ஒரு கேள்வியைக் கேட்டது. சுமந்திரன் மட்டும்தான் சிங்கள மக்களிடம் தமது கருத்துக்களைச் சொல்கிறார், உங்கள் கட்சி சார்பில் ஏன் இதனைச் செய்யவில்லை என்று. அதற்கு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனக்கு மூன்று மொழிகளும் தெரியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியாக இருக்கின்றபோது அதனைச் செய்திருக்கின்றோம் என்றும் கூறினார். தற்போது எமது கட்சியில் சட்டத்தரணி காண்டீபன் இருக்கின்றார். அவர் அதனைச் செய்வார் என்றும் சொன்னார்.

ஆயுதம் ஏந்திப் போராடாத நான் அதனைச் சொல்லி வாக்கைப் பெறுவது அவர்களது தியாகத்தையும் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தும் செயல். மக்களுக்கு தீர்வு வேண்டும் என்றால் இங்கே பேசுவதை சிங்கள மக்கள் மத்தியிலும் பேச வேண்டும் – என்றார்.

வேட்பாளர்களை நிர்வாகிகளுக்கு அறிமுகப்படுத்தும் கூட்டம் நேற்றுப் பிற்பகல் 3:30 மணிக்கு வடமராட்சி நெல்லியடி மாலுசந்தி பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் உடுப்பிட்டி தொகுதி தலைவர் ப.சுரேந்திரன் மற்றும் பருத்தித்துறை தொகுதி உப தலைவர் ச.சுகிர்தன் ஆகியோர் தலைமையில் இடம் பெற்றது.

இதில் தமிழரசு கட்சி வேட்பாளர்கள், பருத்தித்துறை, உடுப்பிட்டி தொகுதி தமிழரசுக் கட்சி நிர்வாகிகள், செயற்பாட்டாளர்கள், பருத்தித்துறை பிரதேச சபை தலைவர் ச.அரியகுமார், கரவெட்டி பிரதேச சபை தவிசாளர் ஐங்கரன், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் இருதயராசா என சுமார் 100 பேர் வரை கலந்து கொண்டனர்.

இதில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், த.தபேந்திரன், சி.சிறிதரன், ஈ.சரவணபவன், இ.ஆனோல்ட், திருமதி சசிகலா ரவிராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## தன்னைச் சுற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததவை வருமாரு:–

நமக்குத் தேவையானவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதற்காக நாட்டை சரி செய்ய முடியாது. நாடு தொடர்பில் ஆராய்ந்து, மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அவருக்கு நாம் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

பேரம் பேசும் நபர்களிடம் கவனமாக இருந்தால், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதியாக நாட்டை சிறந்த முறையில் நிர்வாகம் செய்ய முடியும்.

அனைத்து ஜனாதிபதிகளுக்கும், அரச தலைவர்களுக்கும் என்ன நடந்தது? அவர்கள் தம்மைச் சுற்றி இருந்து பேரம் பேசுவோர் மற்றும் ஒற்றர்களின் கதைகளைக் கேட்டு செயற்பட்டமையால் அனைத்தும் தவறாகவே அமைந்தன. இந்த நிலைமை தற்போதைய ஜனாதிபதிக்கு வரவேகூடாது – என்றார்.

## ராஜபக்ஷாக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியில் நெருக்கடிகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொண்டுள்ள அவர், எனினும் கடந்த 72 வருடத்தில் கட்சியை யாராலும் அழிக்க முடியவில்லை எனவும் கூறினார்.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியால் சில ஆசனங்கள் மட்டுமே வெல்ல முடியும் எனவும், ஆனால் தேர்தலில் வெல்ல முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## கருணாவை விசாரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) இழைத்த அனைத்துப் போர்க்குற்றங்களுக்காகவும் அவரை விசாரணைக்குட்படுத்த வேண்டும். அவரைப் பொறுப்புக் கூற வைக்க வேண்டும்.

– இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசியாவுக்கான பிரிவு தனது ருவிட்டர் பதிவில் கோரிக்கை விடுத்துள்ளது.

2008 இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட வேளை அவரை நாடாளுமன்றத்திலிருந்து அகற்றுமாறு அன்று வேண்டுகோள் விடுத்ததாக சர்வதேச மன்னிப்புச்சபை நினைவுபடுத்தியுள்ளது.

கருணா அவரது பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்காக, வலுவான சுயாதீன விசாரணை மூலம் பொறுப்புக் கூறச் செய்யப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

## முகக் கவசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

முகக்கவசம் அணியாத நபர்களுக்குத் தண்டப்பணம் விதிக்கப்படும் எனவும், தனிமைப்படுத்தல் விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் குறைந்துள்ளது எனச் சுகாதார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பிராந்திய நாடுகளில் தீவிரம் அடைந்துள்ள கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கையில் இரண்டாவது அலை ஏற்படலாம் என்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(மற்றொரு செய்தி 10ஆம் பக்கத்தில்)

## கிளிநொச்சி, ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாக, நேற்று முன் தினம் நண்பகல் கிளிநொச்சி மாவட்டத்துக்கு விஜயம் செய்த ஆளுநர் சார்ள்ஸ், அம்மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றார்.

இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாணக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) பா.வாசுதேவன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்). அருந்தவச்செல்வம், மாகாணக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி கல்வி வலய மற்றும் கோட்டப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கருணாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள கருணாவின் கூற்று தொடர்பில் நேற்று முன்தினம் அவர் வழங்கிய வாக்குமூலத்தையடுத்து கருத்து தெரிவிக்கும் போதே அந்த அதிகாரி இதை குறிப்பிட்டார்.

# மாவையின் சொல்லைக் கேட்டு திரும்பவும் கூட்டமைப்புக்குள் சென்றால் அழிவுதான்!



## எச்சரிக்கின்றார் ஆனந்தசங்கரி

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 27

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்கள் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் சொல்லைக் கேட்டு மீண்டும் மீண்டும் கூட்டமைப்புக்குள் சென்றால் அவர்களுக்கு அழிவுதான் ஏற்படும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார் .**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்தவர்களையும் இணைத்து தேர்தலின் பின் அடுத்த கட்டத்துக்கு நகரவோம் என்ற மாவை சேனாதிராசாவின் கருத்து தொடர்பில் விளக்கமளிக்கும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாவை சேனாதிராசா ஏன் அரசியலில் இருக்கின்றார் என்று எனக்கு தெரியவில்லை. இந்த நாடு சீரழிந்தமைக்கு முக்கிய காரணம் அவரே. இது தொடர்பில் பகிரங்கர விவாதத்துக்கு அவரை அழைக்கின்றேன். தமிழர் விடுதலைக் கூட்டணியை குழிதோண்டி புதைத்தவர்களில் இவரும் ஒருவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோடு மீண்டும் இணைந்து கொள்கின்ற எண்ணம் எனக்கு இல்லை. மாவை சேனாதிராசாவை தடியாலும் தொடமாட்டேன். மாவை சேனாதிராசாவும், சம்பந்தனும் மக்களுக்காக அரசியல் செய்யாது தங்களின் நலன்களுக்காவே அரசியல் செய்தனர். இவர்கள் இனத்திற்கு துரோகம் செய்த துரோகிகள். இது மக்களுக்கே நன்கு புரியும்.

தந்தை செல்வா போன்ற மாபெரும் தலைவர்கள் தலைமைப் பதவியினை வகித்த இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு தான் உரியவனா என்பதை அவரே உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாங்கள் அரசியலில் கறைபடியாதவர்கள். எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இனப் பிரச்சனைக்கான தீர்வை முன்வைப்போம். தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் இந்தியாவை ஒத்த சமஷ்டி முறையினை ஆதரிக்கும் கட்சிக்கே எமது ஆதரவை வழங்குவோம். ஏனனில் எங்களுக்கு அயல் நாடாக இந்தியா காணப்படுகின்றது.

அவர்களுடைய சமஷ்டி முறைமையினையே நாமும் விரும்புகின்றோம் என எமது நிலைப்படடை இந்தியாவுக்கு தெரிவித்தால் தீர்வு விடயத்தில் இந்தியாவின் ஒத்துழைப்பும் எமக்கு கிடைக்கும். இந்திய சமஷ்டி முறையிலான தீர்வு கிடைத்தால் எமது மக்களின் பிரச்சினைகள் பாதியாகக் குறைந்துவிடும் - என்றார் அவர். (ம- 11)

# தீகவாபியவில் கைவிடப்பட்ட 500 வீடுகளை தனிமைப்படுத்தும் நிலையமாக மாற்ற முடிவு!

## புனர்நிர்மாணத்தில் சிவில் பாதுகாப்புப் பிரிவு

அம்பாறை,ஜூன் 27

அம்பாறை தீகவாபிய பிரதேசத்தில் கைவிடப்பட்ட 500 வீடுகளை தனிமைப் படுத்தும் நிலையமாக மாற்றும் திட்டமொன்றை சிவில் பாதுகாப்பு திணைக்களம் முன்னெடுத்துள்ளதாக சிவில் பாதுகாப்பு திணைக்கள ஊடக பணிப்பாளர் கேணல் நிலந்த ரத்னசிங்ஹ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கைவிடப்பட்ட கிராமத்திலிருந்து மேற்படி வீடுகள் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. சுமார் நூறுக்கும் மேற்பட்ட சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் அதன் புனர்நிர்மாண பணிகளை மேற்கொள்ளும் வகையில் திணைக்கள பணிப்பாளர் ஆனந்த பீரிஸின் உத்தரவின் கீழ் இந்த திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளார்.

இவ்வீடுகளை சிவில் பாதுகாப்பு திணைக்களம் புனர்நிர்மாணம் செய்வதானது கொரோனாவில் இருந்து நாட்டைப் பாதுகாக்கும் முக்கிய தேவையை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்கும் பணியாகும் என்றார் அவர்.

# இலங்கையின் மின் திட்டங்களுக்கு உதவுவதற்கு அமெரிக்கா தயாராம்!

இலங்கையின் மின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்க அமெரிக்கா தயாராக உள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலீனா பிரெப்லிஸ் அம்மையார் கூறியுள்ளார்.

மின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஸிஹிறா எரிவாயு மின்னுற்பத்தி உள்ளிட்ட மின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அமெரிக்காவின் ஒத்துழைப்பை வழங்க தூதுவர் இணக்கம் தெரிவித்தார் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கான நாட்டின் மொத்த மின்சாரத் தேவையை பூர்த்தி செய்யத் தேவையான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனளனமின்சக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர இதன் போது கூறியுள்ளார்.

உமா ஓயா, மன்னார் காற்றாலை மின் திட்டம், பிராட்லேண்ட் மற்றும் யாழ். சூரியகல மின் திட்டங்கள் என்பன இந்த வருட இறுதிக்குள் திறக்கப்படுமென அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்தவிடயம்தொடர்பில்இலங்கைக்கு தேவையான அனைத்து தொழில்நுட்ப வசதிகளையும் வழங்க அமெரிக்கா தயாராகவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கதூதுவர் அலீனா பிரெப்லிஸ் உறுதியளித்துள்ளார் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தவும் அமெரிக்கா தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொலை

கம்பஹா, ஜூன் 27

கம்பஹா பிரதேசத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

'கெடவலபிடியே சம்பத் என்ற நபரே இதன்போது உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

# வெலிக்கடை சிறைக்குள் வீசப்பட்ட மர்மப் பொதியால் நேற்றுப் பதற்றம்

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு பின்னால் உள்ள பகுதியில் இனந்தெரியாத நபரால் வீசப்பட்ட பொதி ஒன்றினால் அப்பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.-

குண்டு அடங்கிய பொதி போன்றே இந்த பொதி காணப்பட்டதால் பொரளை பொலிஸாருக்கு உடனடியாகத் தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்திற்கு பொலிஸாரும் விசேட அதிரடிப்படை மற்றும் குண்டு செயலிழப்பு செய்யும் பிரிவினரும் விரைந்தனர்.

எனினும் குறித்த பொதியில் கையடக்கத் தொலைபேசி, அதன் சார்ஜர், ஐஸ் போதைப்பொருள் என்பன மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இந்த பொதி சிறைச்சாலை வளாகத்திற்குள் வீசப்பட்டதால் கைதி ஒருவருக்காக அது வெளியிலிருந்து இவ்வாறு வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பாக பொரளை பொலிஸார் விசாரணைகளை செய்து வருகின்றனர்

# ஞானசாரருக்கு மன்னிப்பு வழங்கியமைக்கு எதிரான வழக்கு ஒக்.19 இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 27

கலபொட அத்தே ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 2 அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்க உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் நேற்று நீதியரசர்கள் விஜித் மலல்கொட, முர்து பெர்னான்டோ மற்றும் பிரீதி பத்மன் சூரசேன ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்டன.

இதன்போது ஞானசார தேரருக்கு சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதிகள் குழாமின் உறுப்பினராக நீதியரசர் பிரீதி பத்மன் சூரசே. முன்னர் செயற்பட்ட காரணத்தால் இந்த மனுக்களை வேறு நீதியர்கள் குழாம் முன்னிலையில் அழைக்க உத்தரவிட்டப்பட்டது.

அதன்படி குறித்த மனுக்களை ஆராய்வதற்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி அழைக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முன்னாள் போராளிகளை அரவணைப்போம்

ஒரு காலத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு, ஐக்கியமாகச் செயற்படுதல் போன்றவற்றில் உயர்ந்து நின்ற அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். இயக்க நடவடிக்கைகளைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்பதற்காக சயனைட் கடித்து மரணித்த புலிகள் போராளிகள் ஏராளம் பேர்.

புலிகளின் ஒழுங்குக் கட்டுப்பாடு, எதிரிகளாலும் கூட சிலாகித்து மெச்சப்பட்டது. இன்று வரை மதிக்கப்படுகின்றது.

மிகக் கண்டிப்பான ஒழுக்கக் கட்டுப்பாட்டுக் கோவையைப் பின்பற்றும் ஒரு விடுதலை இராணுவமாக அதைக் கட்டி எழுப்பினார் தலைவர் பிரபாகரன்.

ஒரு தலைமை, வழிகாட்டல், ஒழுங்கமைவான கட்டமைப்பு என்பதே இறுதிவரை அந்த அமைப்பின் தாரக மந்திரமாக இருந்தது.

2009 இல் முள்ளிவாய்க்கால் பேரழிவுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டமைவும் சிதறியது.

அந்த இயக்கத்தில் இருந்த போராளிகளின் நிலைமை இன்று அவலமாக இருப்பது நம் சமுதாயத்தின் ஒரு பின்னடைவாகும்.

தமது இனத்துக்காக அடுத்த கணமும் தங்கள் உயிரைத் தியாகம் செய்யும் அர்ப்பணிப்புடனும், பற்றுதியுடனும், திடசங்கற்பத்தோடும் ஒரு காலத்தில் சயனைட் குப்பிகளைக் கழுத்தில் கட்டியவர்கள் அவர்கள்.

அவர்கள் சார்ந்த அமைப்பின் ஆயுதப் போராட்டம் இலங்கை அரசுப் படைகளினால் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர், அவர்களின் வாழ்வும் அவலமாயிற்று; அவமாயிற்று.

பன்னீராயிரத்துக்கும் அதிகமான முன்னாள் போராளிகள் புனர்வாழ்வின் பின்னர் சமூகத்துக்குள் விடப்பட்டிருக்கின்றார்கள்.

தம் இனத்துக்காக - தம் மக்களுக்காக - தமது இளமைக் காலத்தை - ஏட்டுக் கல்வியை - வசதி, வாய்ப்புக்களை - தொழில் பயிற்சியை - தொலைத்த அவர்களின் வாழ்வு யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கடந்தும் இன்னும் சீராகவில்லை.

அவர்களின் நிலைமை தொடர்பில் முகப்புத்தகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியாகும் செய்திகள் மனதை உருக்குவனவாக உள்ளன.

அவர்களின் ஆயுதப் போராட்டத்தின் பெறுபேறாகக் கிடைத்த மாகாண சபை ஆட்சி முறைமையும் கூட அவர்கள் விடயத்தில் காத்திரமாக ஏதும் செய்யாமல் கழிந்து போய் விட்டது. ஐந்து வருடம் நீடித்த வடக்கு மாகாண சபை ஆட்சியும் சரி, இரண்டு ஆட்சிக் காலங்களைக் கடந்த கிழக்கு மாகாண சபையும் சரி முன்னால் போராளிகளின் சேம நலன்களுக்காக காத்திரமான வழிகளில் செயற்பட்டவையாகத் தெரியவில்லை.

குறைந்தபட்சம் அந்தக் போராளிகள் பற்றிய சரியான ஒரு புள்ளி விவரத் தரவையாவது வடக்கு மாகாண சபை கட்டமைத்துப் பெற்றதா என்றால் விடை கேள்விக்குறி தான்.

இந்த அவல நிலைமையில்தான் கடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பிற்பாடு அரச புலனாய்வாளர்கள் வன்னியில் முன்னாள் போராளிகளைத் தொடர்ந்து தொல்லைப்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருப்பதாக தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய வேட்பாளருமான சார்ள்ஸ் நிர்மலநாதன் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இந்த அவல நிலைமை நேர்ந்துள்ளமைக்கு பல காரணங்கள் உள்ளன. அவை குறித்து சமூகம் சிந்திக்க வேண்டும். முன்னாள் போராளிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலில் முன்னாள் போராளிகள் தங்களின் பாதுகாப்பு, எதிர்காலம், உரித்துகள் என்பவற்றின் அடிப்படையில் 'எடுப்பார் கைப்பிள்ளைகளாக' இல்லாத வகையில் தமக்குள் ஒன்று திரள வேண்டும். ஐக்கியப்பட வேண்டும். உலகமே வியக்கும் வகையில் ஒழுங்குடன், ஒன்றுபட்டு, ஐக்கியமாக தமது இனத்துக்காக இணைந்த வீரர்களினால், தம் எதிர்காலத்துக்காக கட்டுறுதி மிக்க ஒரு சமூகக் கட்டமைப்பாக அணி திரள முடியாமல் இருக்கின்றது என்பது வேதனைக்குரியது.

அடுத்தது - அத்தகைய போராளிகளுக்கான சமூக அந்தஸ்தை வழங்காமல் இருக்கும் மிகமோசமான நமது சுயநல சமூகம் தன்னை மாற்றிக் கொண்டு, நமக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அவர்களை அரவணைக்கும் விதத்தில் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்த இரண்டும் சாத்தியமாகாத வரை முன்னாள் போராளிகளின் வாழ்வு அவலமாக நீடிப்பதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# கருணா மீது சட்ட நடவடிக்கை எடுக்க அஞ்சுகிறதாம் அரசு

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 27

கருணா அம்மானுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் அஞ்சுவதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். பெலியத்தை சிட்னாமலுவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதித் தலைவராகவும் கிழக்கு மாகாணத்தின் கட்டளை அதிகாரியாகவும் இருந்த கருணா அம்மான் பிற்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துக்கொண்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த கட்சியின் தலைவராக இருந்த போது கருணாவை இரண்டு முறை தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்தார்.

இந்த நிலையில், அண்மையில் தான் செய்த கொலைகள் குறித்து ஒப்புக்கொண்டமையுடன் இராணுவத்தினரைக் கொலை செய்தார் எனக் கூறிய கருணாவுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் பயப்படுகிறது. இது தொடர்பாக மக்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து அரசாங்கம் வாக்குமூலம் வழங்க வருமாறு அழைத்துள்ளது.

அப்படி அழைத்திருந்த நேரத்திலும் கருணா சண்டித்தமான கதையைக் கூறியிருந்தார். குற்றவியல் விசாரணை திணைக்களம் அவருக்கு அடிபணியவில்லை என்பதால், வாக்குமூலம் வழங்கியிருப்பதாக கேள்விப்பட்டோம். இராணுவம் எதற்காக கடமையாற்றியது? எமது மக்களை பாதுகாக்க இராணுவம் கடமையாற்றியது.

போர் நடந்த போது இராணுவத்தினருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டது. இராணுவம் மனித உரிமைகளை மீறியதாக மனித உரிமை அமைப்புகள் சர்வதேசரீதியில் குற்றம் சுமத்தியுள்ளன. இராணுவத்தின் மீது குற்றம் சுமத்திய அமைப்புகள் ஏன் கருணா மீது குற்றம் சுமத்தவில்லை.

அனைவரும் அமைதியாக உள்ளனர். நாட்டின் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். - எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# நயினாதீவு செல்ல பாஸ் வழங்கும் நடைமுறை உடனடியாக நீக்கம்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டை அடுத்து சுமுகத் தீர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 27

நயினாதீவிற்கு செல்வதற்காகப் புதிதாகக் கொண்டுவரப்பட்ட பாஸ் நடைமுறை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டை அடுத்து நீக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இன்று வெள்ளிக்கிழமை (நேற்று) யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருடன் இவ்விடயம் தொடர்பில் தொலைபேசியில் வினவியது.

எமக்குப் பதிலளித்த பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மால் அவ்வாறான எந்த பாஸ் நடமுறை மற்றும் மட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என ஆணைக்குழுவுக்கு தெரிவித்தமையுடன் உடனடியாவே நயினாதீவு மற்றும் குறிகாட்டுவான் உப பொலிஸ் நிலையங்களுக்கு இது குறித்து அறிவிப்பதாக தெரிவித்தார்.

தொடர்ந்து எம்மால் குறிகாட்டுவான் மற்றும் நயினாதீவு உப காவலரண்களில் பொறுப்பதிகர்களின் கவனத்துக்கு இவ்விடயம் கொண்டுவரப்பட்டது.

தமக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தாம் இனி இவ்வாறான மட்டுப்பாடுகளை விதிக்க மாட்டார்கள் எனவும் அவர்கள் எமக்கு தெரிவித்தனர். - என்றார்.

# சிறைக்குக் கடத்தத் தயாராக இருந்த பொருள்கள் சிக்கின

## நான்கு சந்தேக நபர்கள் கைது



பொரளை, மகஸின் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் உள்ள சிறைக் கைதிகளுக்கு சட்டவிரோதமான முறையில் அலைபேசிகள் மற்றும் பாகங்களை அனுப்பவதற்கு முயற்சித்த நான்கு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் ஒருவரின் வீட்டைச் சோதனைசெய்த போது, சிறைச்சாலைக்கு அனுப்புவதற்குத் தயாரா வைத்திருந்த மேலும் சில பொருள்களைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சட்டத்தினால் தடை செய்யப்பட்ட ட்ரோலர் தொழிலுக்கு இப்போது அனுமதி வழங்குகிறது கடற்றொழில் அமைச்சு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 27

**மன்னார் மாவட்டத்தில் ட்ரோலர்கள் மூலம் கடற்றொழில் செய்வதற்கு அனுமதிக்கும் விதத்தில் 427.8 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு பிரதேசம் 'ட்ரோல் கிரவுண்ட்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டு அதற்கான வரைபடம் கடற்றொழில் நீரியல் வள அமைச்சினால் மாவட்டத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

நாடு முழுவதும் ட்ரோலர் மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ள போதிலும் ட்ரோலர் படகின் உரிமையாளர்கள் அதனை அனுமதிக்குமாறு தற்போதைய கடற்றொழில் அமைச்சரிடம் கோரியதன் பிரகாரம் நாரா நிறுவனம் மூலம் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் குறித்த வகை கடற்றொழிலிற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் தற்போது மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் கடலில் இருந்து பேசாலைப் பகுதிக்கு இடைப்பட்ட பகுதியில் 427.8 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு பிரதேசம் 'ட்ரோல் கிரவுண்ட்' என அறிவிக்கப்பட்டு அதற்கான வரைபடம் கடற்றொழில் நீரியல்வள அமைச்சினால் மாவட்ட திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் மூலம் இப்பகுதியில் ட்ரோலர் மீன்பிடி கடற்றொழில் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வரைபட அனுமதியைக் கடற்றொழில் அமைச்சு மன்னார் மாவட்டத் திணைக்களத்திற்கு நேற்று உத்தியோகபூர்வமாக அனுப்பி வைத்துள்ளது என அறிய வந்துள்ளது.

வடக்கு மீனவர்களில் கணிசமானோர் ஆர்ப்பாட்டங்கள் நடத்திக் கேட்டுக் கொண்டதன் பேரிலேயே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் டிரோலர் படகு மற்றும் இழுவைமடித் தொழில் முறையைத் தடை செய்யும் தனிநபர் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் கடந்த ஆட்சியில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இப்போது அச்சட்டம் இருக்கத்தக்கதாக அச்சட்டத்தை மீறிய கடற்றொழிலுக்கு மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் மூன்று கடல் பிரதேசங்களில் அனுமதி வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சுவரொட்டி ஒட்டுவதிலும் பண்பாட்டைப் பேணுங்கள்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 27

தமிழ் வளர்த்த பாரதியார் பண்பாட்டை வளர்க்க மறந்து விட்டாரா எனத் தமிழ் ஆர்வலர்கள் தமது ஆதங்கத்தைக் கொட்டுகின்றனர்.

தேர்தலிற்கான அறிமுகத்துக்காக விளம்பரங்கள், சுவரொட்டிகளைப் பகிரங்கப்படுத்தும் வகையில் பொது இடங்களில் அவற்றைக் காட்சிப்படுத்துவது வழமையானதாக உள்ளபோதும் அது அடுத்தவரை மனம் கவர்வதாக இருக்க வேண்டுமே அன்றி பார்ப்பவரை மனம் சுழிக்க வைப்பதாக அமையலாகாது.

இந்த நிலையில் நல்லூர் பாரதியார் சிலையில் ஓர் அரசியல் கட்சி செய்துள்ள அசிங்கமான செயல் அக் கட்சியின் வாக்கினை மேலும் சரிவிற்கே இட்டுச் செல்லுமே அன்றி வளர்க்குமா எனப் பண்பாளர்கள் மனம் நோகின்றனர்.

இதனால் அரசியல் கட்சிகள் தமது கட்சி விளம்பரங்களின்போது அடுத்தவர்களின் மனங்கள் மீதும் அக்கறை கொள்வது நல்லது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# வேட்பாளரை சட்ட ஆலோசகராக பணிக்குப் பயன்படுத்த வேண்டாம்!

## மாநகரசபைக்கு ஆணயம் அறிவுறுத்தல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகராகப் பணியாற்றும் ஒருவர் சபையில் விடுமுறை பெறாமல் அரசியல் கட்சி ஒன்றில் தேர்தலில் போட்டியிடுகிறார் என மற்றொரு வேட்பாளர் மு.றெமீடியஸினால் தேர்தல்கள் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறையிடப்பாடு தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு தனது முடிவை மாநகர சபைக்கு எழுத்தில் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகராக செயல்படும் ஸ்ரனிஸ்லஸ் செலஸ்றீன் என்னும் சட்டத்தரணி ஓர் ஒப்பந்தப் பணியாளர். அதாவது ஓர் அரச திணைக்கள உதவு தொகையினை பெறும் நிலையில் சபையில் விடுமுறை பெறாது வேட்பாளர் பட்டியலில் போட்டியிடுகின்றமை ஓர் தேர்தல் விதிமீறலாகும்.

எனவே குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு ஓர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

அந்த அறிவுறுத்த லில் 2020ஆம் ஆண்டு தேர்தல் முடிவடையும் வரையில் மேற்படி சட்டத்தரணியை சபை நடவடிக்கைகள் தொடர்பான எந்த வழக்கிலும் பயன்படுத்த வேண்டாம் எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# திருமலையில் கூட்டமைப்பு கூட்டம்





திருகோணமலை, ஜூன்27

திருகோணமலை, அன்புவெளிபுரத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரம் நேற்று இடம்பெற்றது. இக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முன்னாள் நகரசபை உபதலைவர் சிறீதரன், தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் குகதாசன், முன்னாள் நகரசபை உறுப்பினர் சிறி, அருட்தந்தை நிதிதாசன், கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (ம - 11)

# கல்விக் கல்லூரிகள் கலாசாலைகள் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

நாட்டில் உள்ள தேசிய கல்விக் கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களின் விரிவுரையாளர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் கடமைக்குத் திரும்ப வேண்டும் என்று கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் ஆசிரிய பயிலுநர்கள் அன்றைய தினம் சமுகமளிக்கத் தேவையில்லை எனவும் அவர்கள் தமது கல்லூரிகளுக்குச் சமுகந்தரவேண்டிய நாள் குறித்துப் பின்னர் அறியத்தரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஞ்சளுக்குத் தட்டுப்பாடு



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இலங்கையில் மஞ்சளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் மஞ்சள் விற்பனை செய்வதற்கு நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் வடக்கில் 4000 ரூபாவுக்கும் மஞ்சள் கொள்வனவு செய்ய முடியவில்லை என வடக்கு மாகாண நுகர்வோர்கள் தெரிவித்துள்ளனர்.

உணவுக்கு மாத்திரமின்றி ஆலய செயற்பாடுகள், வர்த்தக நிலையங்கள், வீடுகளில் கிருமி நீக்கம் செய்வதற்கு மஞ்சள் பயன்படுத்துகின்றனர். கொரோன நோய் தொற்றின் காரணமாக மஞ்சள் நுகர்வு அதிகரித்தமையினால் இத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தாம் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர் எனக் கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சாத்தான்குளம் சம்பவத்துக்கு முதல்வரே முழுப் பொறுப்பு

## ஸ்டாலின் விமர்சனம்



சாத்தான்குளத்தில் பொலிஸ் காவலில் தந்தை – மகன் உயிரிழந்த சம்பவத்துக்குப் பொறுப்பேற்க வேண்டியது தமிழக முதல்வர்தான். மக்கள் மன்றத்தால் விரைவில் அவர் தண்டிக்கப்படுவார் என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: ஜெயராஜ், பென்னிக்ஸ். இந்தப் பெயர்களை யாரும் மறக்க முடியாது. பொலிஸாரின் வன்முறையால், அராஜகத்தால், இந்த இருவரை, நாம் இழந்து நிற்கிறோம். இந்த இருவருக்கு ஏற்பட்ட அநீதி, என்னைத் தூங்கவிடவில்லை! இவர்களின் குடும்பத்திற்கு ஏற்பட்டிருக்கும், சோகமும் அநீதியும், வார்த்தைகளால் அடக்க முடியாதவை. அவர்களுக்கு நடந்த கொடூரத்தின் உச்சமாக, மல வாசலில் லத்தியைக் கொண்டு தாக்குதல், நெஞ்சின் மீது ஏறி நின்று மிதித்தல் என்று கேள்விப்படும் ஒவ்வொரு செய்தியும் மனதை உலுக்குகின்றன.

இந்த மனிதாபிமானமற்ற, மிருகத்தனமான செயல்கள் பேரதிர்ச்சி அளிக்கின்றன. பாதிக்கப்பட்ட குடும்பத்திலுள்ள 3 பெண் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு உறுதுணையாக இருக்க, தி.மு.க. சார்பில் 25 லட்சம் ரூபா(இந்திய மதிப்பில்) நிவாரணம் அளித்துள்ளோம். இந்த வழக்கின் விசாரணையை வேகமாகவும், நேர்த்தியாகவும், நடத்திப் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நீதி கிடைக்க, சட்ட ரீதியாகத் தி.மு.க துணை நிற்கும் என்றார்.



# எல்லைத் தொழிலாளர்களுக்கு அதிக சம்பளம் அளிக்கப்படும்

எல்லைப் பகுதிகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு இந்திய அரசு 170 சதவீதம் வரை சம்பள உயர்வு வழங்குகிறது எனத் தகவல் வெளியாகி உள்ளது. இந்தியாவிலேயே உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பகுதிகள் என சில பகுதிகளை அரசு வரையறுத்துள்ளது. அதில் முதல் பிரிவில் அசாம், மேகலாயா, சிக்கிம், திரிபுரா, உத்ரகாண்ட் உள்ளன. அடுத்த இடத்தில் அருணாசல பிரதேசம், ஜம்மு காஷ்மீர், மிசோரம் , நாகலாந்து ஆகிய மாநிலங்கள் உள்ளன.

ஆபத்து நிறைந்த பகுதியாக வரையறுக்கப்பட்டுள்ள லடாக் பகுதி மூன்றாவது பிரிவில் உள்ளது. லடாக்கில் இந்திய இராணுவம் வீதி அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொண்ட நிலையில் எல்லை மோதல் நடந்தது.

இந்த நிலையில், இந்தப் பகுதியில் பணிபுரிபவர்களின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லை என்கிற நிலை ஏற்பட்டுள்ளதால் லடாக்கில் வீதி போடுவது உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு சம்பளம் 100 சதவிகிதம் முதல் 170 சதவிகிதம் வரை உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# சாதி அரசியல் செய்கிறார் மோடி இப்படிச் சொல்வது சிவசேனா



பிஹாரில் தேர்தல் வருவதையொட்டி பிரதமர் மோடி எல்லை மோதல் விவகாரத்தைத் தனது தேர்தல் லாபத்துக்காகப் பயன்படுத்தியிருக்கிறார். எல்லை மோதலில் ஈடுபட்டதற்காகப் பிஹாரைச் சேர்ந்த இராணுவப்பிரிவை மட்டும் தெரிவுசெய்து பாராட்டியிருக்கிறார் என்று சிவசேனா அமைப்பு சாடியுள்ளது. பிரதமர் மோடி சாதி, பிராந்திய அரசியல் ஆகிய குறுகிய நோக்கங்களுக்காக இந்திய இராணுவச் சிப்பாய்களின் தைரியத்தைப் பயன்படுத்துகிறார் என்று தங்கள் பத்திரிகையான சாம்னாவில் எழுதியுள்ளது சிவசேனா அமைப்பு.

எல்லை மோதலில் ஈடுபட்ட பிஹார் படைப்பிரிவின் தைரியத்தை மோடி பாராட்டுகிறார், அந்த எல்லை நெருக்கடியின்போது மஹார், மராத்தா, ராஜ்புத், சீக்கியர்கள், கூர்க்கா, டோக்ரா படைப்பிரிவுகள் என்ன சும்மா உட்கார்ந்து புகையிலையை மென்று கொண்டிருந்தனவா? பிஹாரில் தேர்தல் வருவதால் இந்திய இராணுவத்தையே சாதி, பிராந்திய மட்டத்தில் பிரித்துப் பார்க்கிறார் பிரதமர்.

இத்தகைய மோசமான தேர்தல் அரசியலை ஏற்க முடியாது. இந்த அரசியல் ஒரு நோய், கொரோனா வைரஸை விட மோசமானது என்று சிவசேனா மேலும் விமர்சித்துள்ளது.



# ஒரே நாளில் 17,000!

இந்தியாவில் ஒரே நாளில் 17ஆயிரத்த 296 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. அத்தோடு நாடாவிய ரீதியில் இந்தியாவில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்தை நெருங்குகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் 17ஆயிரத்து 296 பேருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமையுடன் 407 பேர் உயிரிழந்துள்ளனர். நாடளாவிய பாதிப்பு 4இலட்சத்து 91ஆயிரத்து 992 ஆக உயர்ந்து 5 லட்சத்தை நெருங்கி உள்ளது. குணமடைந்தவர்கள் – 2இலட்சத்த 85ஆயிரத்து 636 பேர், உயிரிழப்பு 15ஆயிரத்து 301 எனக் கூறப்பட்டு உள்ளது.

# காஷ்மீரில் தாக்குதல் 4வயது சிறுவன் சாவு

ஜம்மு காஷ்மீரில் உள்ள ஆனந்த்நாக் பகுதியில் இந்தியப் படையினரை நோக்கி ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 4 வயதுச் சிறுவன் பரிதாபமாகச் சாவடைந்தான்.

அத்தோடு இந்தியச் சிப்பாய் ஒருவரும் சாவடைந்தார்.

நேற்று நண்பகல் 12.10 மணியளவில் பத்ராகி பாலம் அருகே இந்தச் சம்பவம் நடந்தது. தற்போது அந்தப் பகுதி முழுதையும் சுற்றி வளைத்துள்ள இந்தியப் படையினர் ஆயுததாரிகளைத் தேடும் பணியை முடுக்கி விட்டுள்ளனர்.



# கொரோனாவை எதிர்கொள்ள தயார் நிலையிலுள்ளது டெல்லி

## டெல்லி முதல்வர் தெரிவிப்பு



கொரோனாவைரஸ்தொற்றுநோயைச் சமாளிப்பதற்கு இந்தியாவின் டெல்லி நகரம் முழுமையாகத் தயாராக உள்ளது என்று டெல்லி மாநிலத்தின் முதல்வர் கெஜ்ரிவால் கூறினார். டெல்லியில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வரும் நிலையில், காணொலி வாயிலாகச் செய்தியாளர்களை சந்தித்தபோது அவர் இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

டெல்லியில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு அறிகுறியற்ற நோயாளிகளுக்கு, அல்லது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட இலேசான அறிகுறிகளைக் கொண்டவர்களுக்கு ஒட்சிசன் மீற்றரை வழங்கியுள்ளோம். தினமும் கிட்டத்தட்ட 3ஆயிரம் புதிய நோயாளிகள் கண்டறியப்படுகின்றனர். இருப்பினும், பெரும்பாலானோருக்கு மருத்துவமனை சிகிச்சை தேவை இல்லை என்பதால், மருத்துவமனைகளில் உள்ள 13ஆயிரம் படுக்கைகளில் சுமார் 6ஆயிரம் படுக்கைகள் மட்டுமே நிரம்பி உள்ளன.

வைரஸ் தொற்று அதிகரித்து வந்தாலும், நிலைமை கட்டுக்குள் உள்ளது. கவலைப்படத் தேவையில்லை. பரிசோதனை 3 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று நோயை சமாளிக்க டெல்லி முழுமையாகத் தயார் நிலையில் உள்ளது என்றார்.

# தந்தை, மகன் சாவுக்கு நீதி வழங்குவோம்: பொலிஸாருக்கு ஆலோசனை வழங்குங்கள்

## நீதிபதிகள் தெரிவிப்பு



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பொலிஸ் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாத்தான்குளத்தைச் சேர்ந்த தந்தை, மகன் அடுத்தடுத்து உயிரிழந்தது தொடர்பான வழக்கை உயர் நீதிமன்றக் கிளை தாமாக முன்வந்து விசாரித்து வருகிறது. இந்த வழக்கு நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், பி.புகழேந்தி அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, பொலிஸ் பதிவேடுகளை ஒளிப்படம் எடுத்தும், காணொலிக் காட்சிகளையும் பாதுகாப்பாக வைக்குமாறும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். அத்தோடு பொலிஸாரால் தாக்கப்படுவது கொரோனா தொற்று போன்ற ஒரு தொற்றாகும். கொரோனா தொற்று காலத்தில் அனைவருமே மன அழுத்தத்தில் உள்ளனர். பொலிஸார் கூடுதல் மன அழுத்தத்தில் உள்ளனர். அவர்களுக்குத் தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வழக்கு தொடர்பாக சமூக வலைதளங்களில் தேவையற்ற வதந்திகள், வன்முறையைத் தூண்டும் செய்திகள் பரப்பப்படுகின்றன. இவற்றை தவிர்க்க வேண்டும். இந்த வழக்கில் உரிய நீதி வழங்கப்படும். நீதிமன்றத்தை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.



# கடலுக்குள் விரட்டப்பட்ட அகதிகளை அதிரடியாக மீட்டெடுத்த மீனவர்கள்

## பாராட்டுகிறது பன்னாட்டு மன்னிப்புச் சபை

இந்தோனேசியாவின் வடக்கு ஆச்சே மாகாணக் கடற்கரையில் இருந்து 79 பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 100 ரோஹிங்கியா அகதிகளை இந்தோனேசிய மீனவர்கள் மீட்டனர்.

தென்கிழக்கு ஆசியாவைச் சுற்றியுள்ள நாடுகள் கொரோனா வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடும்போது அகதிகள் படகுகளை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டியுள்ளன, ஆனால் ரோஹிங்கியாக்களை மீட்பது தார்மீகக் கடமை என்று அந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

கடந்த வியாழக்கிழமை கடற்பரப்பில் வைத்து இந்தோனேசிய அதிகாரிகளால் மீட்கப்பட்ட குறித்த அகதிகளுக்குத் தற்காலிகத் தங்குமிடம் வழங்கப்பட்டது. ஆனால் வேறொரு படகில் உணவுடன் அவர்களை மீண்டும் கடலுக்குள் விடுவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியிருந்தனர். இதற்கு உள்ளூர் மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த அதிகாரிகள் சரணடைந்தனர். உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ரோஹிங்கியா படகைக் கரைக்கு இழுத்துச் சென்று அதில் மயக்கமடைந்த நிலையிலிருந்த குழந்தைகளுக்கு உதவினர்.

அரசாங்கம் இயலாது என்றால், நாங்கள் அவர்களுக்கு உதவுவோம், ஏனென்றால் நாங்கள் மனிதர்கள், அவர்களும் (ரோஹிங்கியா அகதிகள்) மனிதர்கள். எங்களுக்கு இதயம் இருக்கிறது என்று மீனவர் சையபுல் அம்ரி தெரிவித்தார். இந்தோனேசியாவின் பன்னாட்டு மன்னிப்புச் சபையின் நிர்வாக இயக்குனர் உஸ்மான் ஹமீத், அகதிகளைக் கரைக்குக் கொண்டு வந்த மீனவர்களைப் பாராட்டினார்.

# அசாஞ்சே மீது புதிய குற்றச்சாட்டு



பிரிட்டனில் சிறைப்படுத்தப்பட்டுள்ள அசாஞ்சே மீது அமெரிக்கா புதிய குற்றச்சாட்டைப் பதிவு செய்துள்ளது.

ஐரோப்பா மற்றும் ஆசிய மாநாடுகளில் இருந்து இரகசியத் தகவல்களைத் திருடி அவரது விக்கிலீக்ஸ் நிறுவனம் மூலம் வெளியிட ஹேக்கர்களை நியமித்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து அசாஞ்சேவின் சட்டத்தரணி பாரி பொல்லாக் கூறுகையில் அசாஞ்சேவுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இருக்கிறது என்பதை இந்தப் புதிய குற்றச்சாட்டு காட்டுகிறது. எல்லா இடத்திலும் பத்திரிகையாளர்களுக்கு இருக்கும் அச் சுறுத்தலை இது பிரதிபலிக்கிறது எனக் கூறினார்.

### பின்னணி

அமெரிக்காவின் இராணுவ இரகசியங்கள் தொடர்பான ஆவணங்களை வெளியிட்டு உலகமெங்கும் பிரபலமானவர், 'விக்கிலீக்ஸ்' நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே. இது தொடர்பாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இதனால் நாடு கடத்தும் சூழ்நிலை உருவானதால் அவர் அமெரிக்காவில் இருந்து வெளியேறினார்.

பிரிட்டனின் தலைநகர் லண்டனில் உள்ள ஈகுவேடார் நாட்டின் தூதரகத்தில் 2012ஆம் ஆண்டில் தஞ்சம் அடைந்தார். 6 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். அதைத்தொடர்ந்து லண்டன் பொலிஸார் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். அவர் மீது அமெரிக்கா தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்தும் வழக்கு லண்டன் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

# சிலைகளை மறுபரிசீலனை செய்யுங்கள்

## பிரிட்டன் பேராயர் தெரிவிப்பு

அடிமைத்தனத்துடன் தொடர்பு உள்ளவர்களின் சிலைகள் அகற்றப்படுகிறன்றனவா அல்லது சிலைகளுக்குப் பொருத்தமான சூழல் வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்ய பிரிட்டன் தேவாலயம் அதன் வழிபாட்டுத் தலங்களில் உள்ள சிலைகள் மற்றும் நினைவுச் சின்னங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அதன் ஆன்மீகத் தலைவர் கேன்டர்பரி பேராயர் ஜஸ்டின் வெல்பி தெரிவித்தார்.

கேன்டர்பரி தேவாலயத்தில் இருந்து சிலைகளை அகற்ற வேண்டுமா என்று கேட்டபோது, இது தனது முடிவு அல்ல என்ற அவர், நாங்கள் மிகவும் கவனமாகப் பார்த்து அவற்றை ஏற்ற சூழலில் வைக்கப் போகிறோம் என்றார்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து காலனித்துவவாதிகள், அடிமை வர்த்தகர்களின் சிலைகளுக்கு எதிர்ப்புகள் வலுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேறுகிறார் ஹோண்டுராஸ் அதிபர்

கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஹோண்டுராஸ் நாட்டின் அதிபர் குணம் அடைந்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அமெரிக்க நாடான ஹோண்டுராஸ் நாட்டின் அதிபர் ஜூவான் ஆர்லண்டோ ஹெர்னாண்டஸுக்குக்(வயது 51) கொரோனாத் தொற்று ஏற்பட்டு அங்குள்ள இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கதிரியக்க சோதனையில், அவரது நுரையீரலில் ஊடுருவல்கள் அதிகரித்து இருப்பதும் ஒட்சிசன் செறிவு குறைந்து இருப்பதும், அழற்சி கூடி இருப்பதும் தெரிய வந்தது.

அவர் தொடர்ந்து மருத்துவக்கண்காணிப்பில்இருந்து வந்தார். இந்த நிலையில் தற்போது அவர் குணம் அடைந்து வருகிறார் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.



இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் சில பகுதிகளைத் தன்னுடன் இணைக்கும் இஸ்ரேலின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார் குழந்தையைச் சுமந்த பாலஸ்தீன மனிதர். அவரது நெஞ்சில் இஸ்ரேலியச் சிப்பாய் துப்பாக்கியை அழுத்திப் பிடிக்கிறார்.

# ஜப்பானில் நிலநடுக்கம்

ஜப்பான்நாட்டின்கிழக்குப் பகுதியில் உள்ள சிபா மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நடுக்கத்தால் வீடு, வணிக வளாகங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் குலுங்கின.

நேற்று அதிகாலை 4.47 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளாகப் பதிவானது. இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 30 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

5 நிமிடத்துக்கும் மேலாக இந்த நிலநடுக்கம் நீடித்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு ஏற்பட்டதாகவோ அல்லது யாரும் காயமடைந்ததாகவோ தகவல்கள் இல்லை. அதேபோல் பெரிய அளவில் பொருள் சேதம் ஏற்பட்டதாகவும் தெரியவில்லை.

# பிராந்திய ஆங்கில வள நிலையம் கிளிநொச்சியில் திறந்து வைப்பு








கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனையில் பிராந்திய ஆங்கில வள நிலையத்தை வடக்கு மாகாண ஆளுநர் பிஎஸ்எம் சாள்ஸ் நேற்று முன்தினம் அங்குரார்பணம் செய்து வைத்துள்ளார்.

கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இச் செயற்பாட்டிற்கான மூன்று லட்சன் ரூபா நிதியை லண்டனைச் சேர்ந்த ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் நிறுவுனர் டாக்டர் நித்தியானந்தம் வழங்கியிருந்தார்,

இதற்கான **Smart Board, Malty Media Projector, Laptop** என்பன வழங்கி வைக்கப்பட்டன.

ஏற்கனவே லண்டன் ரட்ணம் பவுண்டேசன் அமைப்பின் உதவியுடன் வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம், கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலயம், புதுமுறிப்பு விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் கணினி கூடம், கணினிகள் என்பன அண்மைக் காலத்தில் கிளிநொச்சியில் இந்த அமைப்பினரால் வழங்கப்பட்டுள்ள கல்விக்கான உதவிகளாகும்,

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் கலந்து கொண்டு செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கமலராஜன் மற்றும் வலயக் கல்வி பணிமனை உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், றோட்டறிக் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்,

## மாலுசந்தி தமிழரசு கூட்டத்தில் பங்குபற்றிய செய்தியாளர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல்



வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் நேற்று நடந்த தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு எதிராக பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இந்தப் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது கடுமையான சோதனை நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

அச்சமயம் தமது கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் அந்த ஊடவியலாளர் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனராம்.

இவ்விடயம் குறித்து ஊடகவியலாளர் கருத்து தெரிவிக்கையில் –

மாலுசந்தி பிள்ளையார் ஆலய மண்டபத்தில் தமிழரசு கட்சி சார்பில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் 7 வேட்பாளர்களின் பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

அங்கு நான் செய்தி சேகரிப்பதற்காக சென்றிருந்தேன். அங்கு வழமைக்கு மாறாக அதிகரித்த சோதனை நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். என்னையும் வழிமறித்து சோதனை செய்தனர்.

உனது உடமைகளையும் பொலிஸார் சோதனை செய்தனர். பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளை நான் புகைப்படம் எடுத்திருந்தேன்.

இதன் போது என்னுடன் முரண்பட்டுக் கொண்ட பொலிஸார் தமது கடமைகளுக்கு நான் இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட 3 குற்றங்கள் தொடர்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு நான் வர வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின் போது பொலிஸார் கைக்கவசங்கள் எதனையும் அணியாதவாறே என்னையும், எனது உடமை மற்றும் பொது மக்களையும் சோதனை செய்திருந்தனர். – என்றும் அந்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

# ஈழப் பெண்ணை காதலித்துத் திருமணம் செய்தவர் தமிழகத்தில் ஓட ஓட விரட்டி வெட்டிப் படுகொலை

தமிழகத்தில் இலங்கைப் பெண்ணை காதலித்துத் திருமணம் செய்த நபர் ஓட ஓட வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூர் விளார் சாலையில் உள்ள காயிதே மில்லத் நகரைச் சேர்ந்தவர் யூசுப். அவர் அசிலா என்பவரை இரண்டாம் திருமணம் செய்து கொண்டு, காயிதே மில்லத் நகரில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், தஞ்சாவூர் - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில், நேற்று முன்தினம் பிற்பகல் வல்லம் மேம்பாலத்தில் யூசுப் காரில் சென்று கொண்டிருந்த போது, மர்மநபர்கள் அவரைத் திடீரென்று மறித்து சரமாரியாக அரிவாளால் தாக்கியுள்ளனர்.

வெட்டுப்பட்ட யூசுப், காரிலிருந்து இறங்கித் தஞ்சாவூர் சாலையை நோக்கி ஓடியுள்ளார். அப்போதும் அந்த மர்ம நபர்கள் அவரைத் துரத்திச்சென்று ஓட ஓட விரட்டி வெட்டியதால், பலத்த காயமடைந்த யூசுப், சம்பவ இடத்திலே பரிதாபமாக உயிரிழந்தார்.

இது குறித்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் முதற்கட்ட விசாரணையில், யூசப்பின் இயற்பெயர், ஜோசப் என்று தெரிய வந்தது. அவர், குவைத் நாட்டில் வேலை பார்த்து வந்த போது, இலங்கை நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட அசிலா என்பவரும் குவைத்தில் வேலைபார்த்து வந்துள்ளார்.

அங்கு, இருவருக்கும் அறிமுகம் ஏற்பட்டு, பின்னர் காதலிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஜோசப்பிற்கு ஏற்கெனவே கல்யாணமாகியிருந்த நிலையிலும் அசிலாவை காதலித்து வந்துள்ளார். இதற்கிடையே அசிலா இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர் என்பதால், அவருக்காக ஜோசப் மதம் மாறி திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இதையடுத்து தஞ்சாவூரில் இருவரும் வசித்து வந்துள்ளனர். திருமணம் நடந்து சில ஆண்டுகளிலே, இருவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டுள்ளது.

அசிலாவிற்கு தஞ்சாவூரில் சொத்துகள் இருப்பதால், சொத்துக்களைக் கேட்டு அசிலாவிடம் யூசுப் பிரச்சினை பண்ணியுள்ளார்.

தஞ்சாவூர் தாலுக்கா காவல் நிலையத்தில் இரண்டு முறை அசிலா யூசுப் மீது புகார் செய்துள்ளார். தற்போது அவர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையி, யூசுப் ஓட ஓட விரட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

யூசப் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கிடையில், கரந்தைப் பகுதியிலிருந்த அசிலா தலைமறைவாகிவிட்டார். அவரையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.



அசிலா கிடைத்த பிறகுதான் கொலைக்கான முழு காரணமும், யார் கொலை செய்தார்கள் என்ற விவரமும் தெரிய வரும் என்று பொலிஸார் கூறியுள்ளனர். மேலும், யூசுப்பின் முதல் மனைவி பற்றி எந்தத் தகவலும் தெரியவில்லை.

# ஐ.தே.கட்சி ஆட்சியில்தான் தீர்வு முயற்சிகள் முன்னெடுப்பு

## விஜயகலா மகேஸ்வரன் விளக்கம்



**யாழ்ப்பாணம், ஜூன் 27**

**ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் சிறுபான்மை மக்களின் தீர்வு குறித்து முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என முன்னாள் அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

யாழில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் சிறுபான்மையினராகிய தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இது அனைவரும் அறிந்த விடயமே.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில்தான் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுகள் வெளிநாடுகளில் இடம்பெற்றிருந்தன.

அதேபோல கடந்த 2015 இல் மீண்டும் பிரதமராக வந்த ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியினால் புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தின் மூலம் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி எடுக்கப்பட்டது.

ஏனைய அரசாங்கங்களோடு ஒப்பிடும்போது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே சிறுபான்மை இனத்தவர்களாகிய தமிழ், முஸ்லிம் மக்கள் மீது அதிக அக்கறை காட்டியதோடு ஜனநாயக ஆட்சியை மேற்கொண்டது.

அத்தோடு மட்டுமல்லாது வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்கள் அனைத்தும் பல்லாயிரம் கோடி ரூபா நிதியில் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டது. அது நீங்கள் அனைவரும் அறிந்ததே. கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் போது வடபகுதியில் பெருமளவு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

# ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு இலங்கைப் பொலிஸாருக்கு உதவி



கொழும்பு, ஜூன் 27

கொரோனா பெருந்தொற்றுச் சவாலை எதிர்கொள்ளும் வகையில், தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலங்கை பொலிஸாருக்கு வலுவூட்டும் முகமாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (யூ.என்.டி.பி.) பொலிஸாருக்கு வழங்குவதற்கென ஒரு தொகுதி பாதுகாப்பு உபகரணங்களை அன்பளிப்பாக அளித்துள்ளது.

1 லட்சத்து 70 ஆயிரம் கையுறைகள், 10 ஆயிரம் முகக்கவசங்கள், 600 பாதுகாப்புக் கண்ணாடிகள், 600 முகக் காப்புக் கண்ணாடி மறைப்புகள், 2 ஆயிரம் மீள் பாவனையற்ற கையுறைகள், 2 ஆயிரத்து 600 பாதுகாப்பு உடைகள், 2ஆயிரம் உயிர் இரசாயனக் கழிவுப் பைகள், 500 தொடுகையில்லாத இன்ப்ஃரா ரெட் காய்ச்சல் அறியும் கருவிகள் உட்பட பல பொருள்கள் நேற்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன

# வவுனியாவில் இன்று மக்கள் மன்றம்

வவுனியா, ஜூன் 27

'நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் கட்சிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?' - என்ற தலைப்பில் அரசியல் பிரமுகர்களும், சமூக பிரதிநிதிகளும் பங்கேற்கும் மக்கள் மன்றம் இன்று காலை 9.15 மணியளவில் வவுனியா விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மயூரன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார், பொதுஜன பெரமுன சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சிறிரெலோ சார்பில் உதயராசா, ஈழ மக்கள் ஜனாயக கட்சி சார்பில் திலீபன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைக்கவுள்ளனர். (ம - 11)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

*பூகொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஓவிடிகம பிரதேசத்தில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரொட்கன் ரக துப்பாக்கி ஒன்றும் மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் 02 தோட்டாக்களும், 02 வாள்கள் மற்றும் சில ஆயுதங்களுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*நேற்று ஜயவர்தனபுர பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் குழுவொன்றும் மற்றும் பூகொடை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்றும் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.*

*கைது செய்யப்பட்ட 41 வயதுடைய சந்தேகநபர் ஓவிடிகம, பூகொடை பிரதேசத்தை சேர்ந்தவராவார். இந்தச் சந்தேகநபர் நேற்று பூகொடை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவிருந்தார்.*

# தனியார் மருத்துப் பல்கலை அமைவதற்கு எதிராக மருத்துவ மாணவர் போராட்டம்!

*கொழும்பு, ஜூன் 27*

*இலங்கையில் மேலும் ஒரு தனியார் மருத்துவப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தி அனைத்துப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக் குழுவினர் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் இலங்கை மருத்துவப் பேரவை (எஸ்.எல்.எம்.சி.) முன்பாக நேற்று மதியம் இடம்பெற்றது.*

*இலங்கையில் இன்னுமொரு மருத்துவப் பல்கலைக்கழகம் உரிய செயன்முறைகளைப் பின்பற்றாமல் ஆரம்பிக்கப்படுமாயின், சைற்றம் போலவே தோல்வியில் முடியும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்*







காலைக்கதிர் Kalaikkathir

# கருணா குற்றவாளியெனின் தூக்குத்தண்டனை நிச்சயம்!

## சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் தெரிவிப்பு

கருணா அம்மான் சட்டத்தின்முன் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டால் அவருக்கு உயர்நீதிமன்றத்தால் மரணதண்டனை விதிக்கப்படலாம் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி யூ. ஆர். டி. சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கருணா அம்மான் வெளியிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும். குறிப்பாக இலங்கையிலுள்ள சில சட்டங்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் மனிதப் படுகொலையை அடிப்படையாகக் கொண்டு செயற்படலாம். பயங்கரவாத தடைச்சட்டம் இருக்கின்றது. அதன் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கலாம். அது மட்டுமல்ல குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் சட்டமா அதிபர் பரீசிலித்து தீர்மானமொன்றை எடுக்கலாம்.

தான் இத்தனைபேரை கொன்றார் என்றே கருணா அம்மான் வாக்குமூலம் வழங்கியுள்ளார். யாரினது அச்சுறுத்தலும் இல்லாமல் சுயாதீனமாகவே அவர் அந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். எனவே, அதனை அவருக்கு எதிரான சாட்சியாகப் பாவிக்கமுடியும்.

முதலில் அவரின் அறிவிப்புத் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும். அந்தபணி தற்போது ஆரம்பமாகியுள்ளது. அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியுள்ளார். அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அதேபோல் கருணாவுக்கும் விளக்கமளிப்பதற்கு வாய்ப்பும் வழங்கப்படவேண்டும்.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் பொலிஸாரால், அவை சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்படும். அவற்றை உரிய வகையில் பரீசிலித்த பின்னர் சட்டாமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கும் தீர்மானத்தை எடுக்கலாம்.

இந்த நிலையில் அவர் குற்றவாளியென உயர்நீதிமன்றம் தீர்மானித்தால், மரணதண்டனை விதிக்கப்படலாம். அவ்வாறு இல்லையெனில் விடுபடலாம் - என்றார்.

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய பிரதேச சபை உறுப்பினர் கைது!

களுத்துறை, ஜூன் 27

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் பிரதேச சபை ஒன்றின் எதிர்க்கட்சி உறுப்பினர் உட்பட இரண்டு பேரைக் களுத்துறை தெற்குப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொரோனாப் பெருந் தொற்றுக் காலத்தில் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களை மீறி பொது மக்களைக் கூட்ட முற்பட்டமை மற்றும் பொதுச் சொத்துக்குச் சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் களுத்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.ஏ.டி. நிலாந்தவும், அவரது உதவியாளர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறையில் அமைந்துள்ள வெரோன் பெர்ணான்டோ விளையாட்டரங்கத்தின் பிரதான நுழைவாயில் கதவுகளில் பூட்டப்பட்டிருந்த பூட்டை உடைத்து உள் நுழைய முனைந்தனர் என்று விளையாட்டரங்கின் முகாமையாளர் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்தே பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும், அவரது உதவியாளரும் கைது செய்யப்பட்டனர் எனவும், தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி கூட்டம் கூட்ட முற்பட்டமை மற்றும் பொதுச் சொத்துக்குச் சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்களுக்கெதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள இருவரும் களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.





# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேர்தல் பிரசாரம் நேற்றுத் தொடங்கியது

பொதுத்தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் வியூகம் வகுத்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அதன் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்றுப் பிரச்சாரத்தை ஆரம்பித்தது.

தேர்தலுக்கான அரசியல் ஆட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரரான சௌமியமூர்த்தி தொண்டமானின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து ஆசிபெற்றனர்.

காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், உப தலைவர் மருதபாண்டி ரமேஷ், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற வேட்பாளர் துரை மதியுகராஜா, கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி உட்பட இ.தொ.காவின் அனைத்து வேட்பாளர்களும் இதற்கான நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பொதுத்தேர்தலில் ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து மொட்டு சின்னத்தில் போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்களுக்காக 32 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் என அறிவித்துள்ளது.

ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று ஆரம்பமாகிய பிரசாரம், ஓகஸ்ட் 3 ஆம் திகதிவரை தொடரும் என காங்கிரஸின் பிரச்சாரக்குழு அறிவித்துள்ளது.

காங்கிரஸின் இளைஞர் அணி, மகளிர் பிரிவு, தொகுதி அமைப்பாளர்கள் என முக்கிய பிரமுகர்களின் பங்குபற்றலுடன் நுவரெலியா மாவட்டத்திலுள்ள நான்கு தேர்தல் தொகுதிகளிலும் மக்கள் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் ஜீவன் தொண்டமான் பங்கேற்று, காங்கிரஸின் எதிர்கால திட்டங்கள் பற்றி தெளிவுபடுத்தவுள்ளார்.

அதேவேளை, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இ.தொ.கா. வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெறும் பிரதான பரப்புரைக் கூட்டங்களிலும் காங்கிரஸின் சார்பில் அதன்பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் பங்கேற்கவுள்ளார்.

# நெகிழ்வு போக்குவரத்துத் திட்டம் புதிதாகத் தயாரிக்கின்றதாம் அரசு

அரசநிறுவனங்களில் நெகிழ்வு போக்குவரத்துத் திட்டமொன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டிலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட சேவையை முன்னெடுத்து வருகின்றன. இந்நிலையில், ஜூலை மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னர், பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பிறகு, பொதுப் போக்குவரத்தில் பாரிய நெருக்கடி நிலை ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டு, இவ்வாறான நெகிழ்வு போக்குவத்துத் திட்டத்தை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரச நிறுவனங்களில் பணியாற்றும் சேவையாளர்களின் அலுவலக நேரத்தில் மாற்றம் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மேற்படி நடைமுறையை ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவர அமைச்சு தீர்மானித்துள்ளது.

# முகக் கவசம் அணியாவிட்டால் இனி அபராதம்

*பொது இடங்களில் முகக்கவசம் அணியாத நபர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும், தனிமைப் படுதல் விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.*

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றிய பொலிஸ் தரப்பின் 40 கோவைகளைத் திருப்பி அனுப்பிய சட்டமா அதிபர்

பதில் பொலிஸ்மா அதிபர் முன்வைத்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் சந்தேக நபர்கள் தொடர்பான முழுமையற்ற 40 அறிக்கைகள் சட்டமா அதிபரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தின தொடர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தை மையப்படுத்தியும் அது சார்ந்த ஏனைய சம்பவங்கள் குறித்தும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் முழுமையற்ற அறிக்கைகளே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேராவால் பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு இவை திருப்பி அனுப்பட்டன என சட்டமா அதிபரின் செய்தித் தொடர்பாளர் சிரேஷ்ட அரச சட்டவாதி நிரரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பல்வேறு பொலிஸ் நிலையங்கள் ஊடாக, உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களை மையப்படுத்திய பல்வேறு விசாரணைகளின் கோவைகள் வழக்கு தொடர்வதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருந்தன.

இதில் 40 கோவைகளில் விசாரணைகள் பூர்த்தியாகி இருக்கவில்லை. எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் மிகவும் பலவீனமாக அந்த விசாரணைக் கோவைகள் இருந்தன.

அதனால் அந்த கோவைகளை மீள திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எதிர்காலத்திலும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை மையப்படுத்திய எந்த விசாரணையாக இருப்பினும் பூரணப்படுத்தப்படாத கோவைகள் சட்ட மா அதிபருக்கு அனுப்பட்டால் அவையும் திருப்பி அனுப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கலாநிதி குருபரன் எதிர் யாழ். பல்கலை வழக்கில் அரச சார்பில் பிரசன்னமாக சட்ட மா அதிபர் மறுப்பு

## தனியார் சட்ட உதவியை நாடுவதற்கு விசேட பேரவைக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத் துறையின் முன்னாள் தலைவரும், சட்டத்தரணியுமான கலாநிதி குமாரவடிவேல் குருபரன் நீதிமன்றங்களில் முன்னிலையாவதற்கு தடை விதித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட பணிப்புக்கு எதிராக அவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணைகளின் போது, அரச நிறுவனங்களான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சார்பில் – கலாநிதி குருபரனுக்கு எதிராக வாதாடுவதற்கு – தனது சட்டத்தரணிகளை நியமிக்க முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களுக்கு எதிரான வழக்குகளின் போது, அரச நிறுவனங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைக் கோருவதும், வழக்குகளின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சட்டவாதிகள் முன்னிலையாவதும் வழக்கமாகும். அதன்படி கலாநிதி குருபரனால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை வழக்கில் கடந்த மே 30 ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட எதிர் மனுதாரர்கள் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இந்திகா தேமுனி டி சில்வாவின் ஏற்பாட்டில் அரச சட்டவாதி முன்னிலையாகியிருந்த போதிலும், நிறுவனங்களுடனான கலந்துரையாடல்கள், ஆய்வுகளின் பின்னர் இந்த வழக்கில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகியன சார்பில் தம்மால் முன்னிலையாக முடியாதிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இரு நிறுவனங்களுக்கும் தனித்தனியாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திடீரென எழுந்த இந்த நெருக்கடி நிலையை அடுத்து எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள நீதிமன்றப் பரிசீலனைகளின் போது, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், அதன் பேரவை ஆகியவற்றின் சார்பில் முன்னிலையாவதற்கு தனியார் சட்ட உதவியைப் பெற்றுக் கொள்வதென யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விசேட பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்களாகப் பணியாற்றும் சட்டத்தரணிகள், நீதிமன்றங்களில் வழக்குகளில் முன்னிலை ஆகுவதற்குத் தடைவிதித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியமைக்கும், தான் நீதிமன்றங்களில் முன்னிலையாவதைத் தடுக்கும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவை எடுத்த தீர்மானத்துக்கு எதிராகவும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், சடத்தரணியுமான கலாநிதி குமாரவடிவேல் குருபரன் கடந்த வருடம் டிசெம்பர் 17 ஆம் திகதி சட்டத்தரணி மோகன் பாலேந்திரா ஊடாக உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள், சட்ட மா அதிபர் உட்பட 41 பேர் இந்த வழக்கில் எதிர் மனுதாரர்களாக மனுவில் இணைக்கப்பட்டிருந்தனர். இந்த

வழக்கு கடந்த மார்ச் மாத இறுதியில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படுவதற்குத் திகதியிடப்பட்டிருந்த போதிலும், நாட்டில் ஏற்பட்ட கொரோனாப் பெருந்தொற்று முடக்கல் காரணமாக 50 நாள்கள் பிற்போடப்பட்டு கடந்த மே மாதம் 30 ஆம் திகதி பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூர்ய, நீதியரசர் முர்து பொன்னாண்டோ ஆகிய இருவரும் கொண்ட அமர்வு முன் மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன் போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட எதிர் மனுதாரர்கள் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இந்திகா தேமுனி டி சில்வாவின் ஏற்பாட்டில் அரச சட்டவாதி முன்னிலையாகியிருந்தார்.

மனுதாரர் தன்னுடைய கட்சிக்காரர்கள் சார்பில் ஏற்கனவே நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள வழக்குக்களில் முன்னிலையாவதற்கு அனுமதியளித்து கட்டளையிடப்படவேண்டும் என்று நகர்த்தல் பத்திரம் ஊடாகக் கோரப்பட்டது. இந்த மனுவில் இடைக்காலக் கட்டளையாக்கும் விடயத்தை விவாதத்துக்கு எடுக்க பிரதம நீதியரசரால் அரச தரப்பிடம் கேட்கப்பட்டது. அதற்கு தவணை வழங்குமாறு அரச தரப்பால் அன்றைய தினம் கோரப்பட்டது. அதற்கமைய மனுவை ஏற்றுக்கொண்டு விசாரணை நடத்துவது பற்றியும் இடைக்காலக் கட்டளை பற்றியும் முன்னுரிமை விடயங்கள் எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதி விவாதத்துக்கு எடுக்கப்படும் என்று உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டது.

# அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தயாராக இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் கணேஷ் வேலாயுதம் குற்றச்சாட்டு

வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தயாராக இல்லை.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ் வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

300 கோடி ரூபா நிதி அள்ளி கொட்டி ஆரம்பிக்கப்பட்ட இரணைமடு குடிதண்ணீர் திட்டம் இடைநடுவில் நிற்கின்றது. யாழ்ப்பாணம் மக்களின் வாக்குகளுக்காக அலையும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கிளிநொச்சி தண்ணீரை யாழ்ப்பாணத்திற்கு விடுவிக்காமல் தடுத்து வருகின்றார்.

இரணைமடு முறைகேடு தொடர்பில் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு அறிக்கையை கடைசி வரையில் வெளியிடாது முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் இராகவன் மூடி மறைத்திருந்தார்.

அதேபோல் வலிகாமம் வடக்கு குடிதண்ணீரில் கழிவு ஓயில் கலக்கப்பட்ட விவகாரத்தையும் மூடி மறைத்து ஆளாளுக்கு அறிக்கை விடுத்தார்கள். இறுதியில் தென்னிலங்கையினை சேர்ந்த சுற்று சூழலியாளரே கழிவு ஓயில் கலந்தமையினை அம்பலப்படுத்தினார்.

அதே போன்று வடக்கு மாகாணசபையின் மிகப்பெரிய ஊழலான நெல்சிப் முறைகேடுகள் தொடர்பான விசாரணை ஏழு வருடங்களாகவும் கிடப்பில் கிடக்கின்றது.

இவை தொடர்பில் எல்லாம் பேசுவதற்கு கூட்டமைப்பின் வேட்பாளர்கள் எவரேனும் தயாராக உள்ளார்களா?

வடக்கு மாகாணத்தின் கல்வி, விளையாட்டு, விவசாயம், கடற்றொழில் போன்ற துறைகளை ஊழல் இல்லாத வகையில் முன்னேற்றுவதற்காகவே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். மக்கள் என்னை நாடாளுமன்றம் அனுப்புகின்றபோது இவற்றைச் செய்து முடிப்பேன். அடுத்த முறை தேர்தலுக்கு எத்தகைய விளம்பரங்களும் இல்லாமலேயே எனது செயற்பாட்டைப் பார்த்து மக்களே என்னை நாடாளுமன்றம் அனுப்புவார்கள்.

வடக்கு மாகாணத்தின் கல்வியானது பின் தங்கிய மாகாணமாக ஆகிவிட்டது. இதனை உடனடியாக முன்னேற்ற வேண்டும். அதுபோல் விளையாட்டுத் துறையில் எமது மாணவர்கள் ஆர்வத்துடன் இருக்கின்ற போதும் போட்டிகளில் பங்கு பற்றி தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்படுகின்றார்களே தவிர சர்வதேச ரீதியில்சென்று சாதனை நிலைநாட்டவில்லை. ஆனால், எனது எண்ணம் வடக்கு மாகாணத்தின் விளையாட்டுத் துறையை சர்வதேச ரீதியில் கொண்டு செல்வதற்கு



உதவுவதே.

அதுபோன்று விவசாயம் கடற்றொழில் போன்றவற்றில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி இரு தொழில் துறைகளையும் முன்னேற்ற வேண்டிய தேவையின் அவசியமுள்ளது. இங்குள்ள அரசியல்வாதிகள் தமக்கான தேவைகளைத் தான் நிறைவேற்றிக்கொள்கின்றார்களே தவிர மக்களுக்காக எதையும் செய்யவில்லை. இவர்களுடன் சேர்ந்தவர்களாகவே அரச அதிகாரிகளும் செயற்படுகிறார்கள்.

எமது காலத்தில் செய்யப்படுகின்ற ஒவ்வொரு திட்டத்துக்கும் எவ்வாறு அந்தத் திட்டங்கள் செய்யப்படுகின்றன, எத்தகைய நிதி செலவு செய்யப்படுகின்றது என்பது தொடர்பில் மக்களுக்கு வெளிப்படுத்துவேன்.

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினருக்குக் கிடைக்கும் அத்தனை சலுகைகளையும் என்ன என்பதை ஒவ்வொரு முறையும் வெளிப்படுத்துவதுடன், வாகன அனுமதிப்பத்திரம் உட்பட அனைத்து வகையான சலுகைகளையும் மக்களுக்காகவே செலவு செய்வேன் – என்றார்.

# சித்தன்கேணியில் கொள்ளை

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை சித்தன்கேணியில் வயோதிபப் பெண்கள் வசிக்கும் வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளைக் கும்பல், அவர்களை அச்சுறுத்தியும் தாக்கி அவர்களிடமிருந்து 25 பவுண் தங்க நகைகள் மற்றும் 50 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுத் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் காரைநகர் – யாழ்ப்பாணம் வீதியில் சித்தன்கேணியில் வயோதிபப் பெண்கள் இருவர் மட்டும் வதியும் வீடொன்றில் நேற்று அதிகாலை 1.10 மணியளவில் இடம்பெற்றதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வயோதிபப் பெண் ஒருவர் கூக்குரலிட்டமையால் அவரது வாயை துணியால் கட்டிவிட்டு வீட்டை சல்லடை போட்டு தேடுதல் நடத்தியுள்ளனர்.

அலுமாரியிலிருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுவிட்டு வேறு நகைகள் இருந்தால் தரும்படி வாயைக் கட்டிய வயோதிபப் பெண்ணைத் தாக்கி கொள்ளையர்கள்கள் கேட்டுள்ளனர்.

அப்போது கொள்ளையர்களுக்குப் பயந்து போத்தல்களில் போட்டு வைத்த நகைகளையும் அந்தப் பெண் எடுத்துக் கொடுத்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, தடயவியல் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டமையுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

---

# முன்னாள் சிறைச்சாலை ஆணையரின் பிணை ரத்து

வெலிக்கடை சிறைச்சாலை கலவர வழக்கின் முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் நியோமால் ரங்கஜீவ, முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா ஆகியோரின் பிணையை இரத்து செய்து அவர்களை விளக்கமறியிலில் வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டியாராச்சி மற்றும் மஞ்சுள திலகரட்ண ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதற்கு இந்த இருவரும் வருகை தந்ததன் பின்னர் வழக்கு மற்றும் முறைப்பாட்டிற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தனர் என்ச் சட்ட மா அதிபர் மன்றுக்கு அறிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்ட நீதிமன்றம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் உள்ள நிலையில், பிரதிவாதிகள் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் சட்ட வரையறை உள்ளதாகவும், பிரதிவாதிகள் விதிமுறைகளை மீறி செயற்பட்டால் அது தொடர்பில் நீதிமன்றத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நீதிபதிகள் குழாம் இதன்போது பிரதிவாதிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

வழக்கின் மேலதிக விசாரணை அடுத்த மாதம் முதலாம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தலுக்கு 2 வாரங்கள் இருக்கும்போது கருணாவைச் சிறையில் அடைப்பார்கள்

## இதுதான் அரசின் தில்லுமுல்லு என்கிறார் ஹரீன் பெர்னாண்டோ



நாடாளுமன்றத் தேர்தலுக்கு இரண்டு வாரங்கள் இருக்கும்போது கருணா அம்மானைச் சிறையில் அடைப்பார்கள். சிறைச்சாலைகளில் கட்டில், குளிர்சாதனப் பெட்டி, தொலைபேசி என அனைத்தும் உள்ளன. இரண்டு வாரங்கள் உள்ளே வைப்பார்கள். அப்போது அம்பாறையிலுள்ள தமிழ் மக்கள் கருணா எமக்காகச் சிறைக்குச்சென்றார் என நினைப்பார்கள். இதனால், கருணாவைக் காப்பாற்ற நாம் அவருக்கு வாக்களிக்க வேண்டும் என எண்ணுவார்கள். இதுதான் அரசின் தேர்தல் தில்லுமுல்லு.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஈஸ்டர் தினத் தாக்குதலின் பின்னணியில் தற்போதைய அரசு இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் தனக்கு இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத் தாக்குதல்கள் நடக்கின்றன. 27ஆம் திகதி ஒரு தொலைக்காட்சி கோட்டாபய ராஜபக்ஷவை நேரடி நிகழ்ச்சிக்கு அழைத்தது. நாடு ஆபத்தில், நாட்டை பொறுப்பேற்க விருப்பமா என்று அந்த நிகழ்ச்சியின் தொகுப்பாளர் கோட்டாபயவிடம் கேட்கின்றார். ஆம் நான் தயாராக இருக்கின்றேன் என்று கோட்டாபய கூறினார். எப்படி விளையாட்டு?, அதன் பின்னர் எப்படி திட்டங்களை தீட்டியுள்ளனர்? நடந்த அழிவுகள், ஊடகங்கள் நடத்திய விளையாட்டுக்கள் எப்படி?

நூற்றுக்கு 52 வீதத்தை கோட்டாபய ராஜபக்ஷ பெற்றார். சஜித் பிரேமதாஸ 42 வீதத்தைப் பெற்றார். கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடைத்த வாக்குகளில் 5 சத வீதம் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைத்திருந்தால், இரண்டாவது விருப்பு வாக்குகளை எண்ண நேரிட்டிருக்கும். ஜே.வி.பியினர் தமது இரண்டாவது விருப்பு வாக்குகளை சஜித் பிரேமதாஸவுக்கே வழங்கியிருந்தனர். இதனை நடக்கவிடாமல் தடுக்கவே ரணில் விக்கிரமசிங்க, தானே பிரதமர் என்ற கதையைக் கூறினார். சஜித் பிரேமதாஸவின் வெற்றியைத் தடுக்கவே ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டது. எனது கொள்கைகளின் அடிப்படையில் நான் பொய் சொல்ல மாட்டேன்.

எனக்கும் கொழும்பு பேராயருக்கும் இடையில் பிரச்சினையில்லை. எனினும், ஊடகங்களுடன் பிரச்சினை இருக்கின்றது.

இராணுவத்தைச் சேர்ந்த மூவாயிரம் பேரைக் கொன்றார் எனக் கருணா அம்மான் கூறுகின்றார். அவரைக் குற்றப் புலனாய்வு விசாரணைத் திணைக்களத்துக்கு அழைப்பார்கள் என்று நான் முன் கூட்டியே கூறினேன். அதேபோல் நடந்தது. தேர்தலுக்கு இரண்டு வாரங்கள் இருக்கும்போது கருணாவைச் சிறையில் அடைப்பார்கள்.

சிறைச்சாலைகளில் கட்டில், குளிர்சாதனப்பெட்டி, தொலைபேசி என அனைத்தும் உள்ளன. இரண்டு வாரங்கள் உள்ளே வைப்பார்கள். அப்போது அம்பாறையிலுள்ள தமிழ் மக்கள் கருணா எமக்காகச் சிறைக்குச்சென்றார் என நினைப்பார்கள். இதனால், கருணாவைக் காப்பாற்ற நாம் அவருக்கு வாக்களிக்க வேண்டும் என எண்ணுவார்கள். இதுதான் அரசின் தேர்தல் தில்லுமுல்லு.

எவரும் உள்ளே வரக் கூடிய வகையிலேயே நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியை உருவாக்கினோம். அரசியலில் இருந்து இன்னும் சிலர் விலகிச் செல்ல உள்ளனர்.

சரத் பொன்சேகாவுக்கும் அந்த நிலைமையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இதற்கு எந்தக் காரணங்களும் இல்லை. நேர்மையாக அரசியலில் ஈடுபட்டு வருவதே இதற்குக் காரணம்.

ஈஸ்டர் தினக் குண்டுத் தாக்குதலுக்கு மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும். இதனை நான் அச்சமின்றி கூறுகிறேன். அவர்தான் அன்றைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. முப்படை தளபதி, பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ், புலனாய்வுப்பிரிவு என அனைத்தும் அவரது கட்டுப்பாட்டில் இருந்தன.

யானையே சஜித் பிரேமதாஸவை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற இடமளிக்கவில்லை. நாங்கள் யானையை நேசிக்கின்றோம். எனினும், தற்போதுள்ள யானை பாகன் பைத்தியக்காரன். யானை பாகனை மாற்ற வேண்டும். சஜித் பிரேமதாஸவிடம் குறைபாடுகள் இருக்கின்றன என்று நினைக்க வேண்டாம் - என்றார்.

## 'மொட்டு'வின் ஆட்சி மலர்வது உறுதி!

### அம்பாறை மாவட்ட வேட்பாளர் விமலவீர நம்பிக்கை




நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசே ஆட்சி செய்யும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் வன ஜீவராசிகள் வள இராஜாங்க அமைச்சருமான விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

கடந்த காலத்தில் வடக்கு , கிழக்கு மாகாணங்களில் அதிகமான சேவைகளைச் செய்தது மஹிந்த ராஜபக்ஷ அரசு எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மஹிந்த அரசின் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள பல வீதிகள் காபர்ட் வீதிகளாக மாற்றியமைக்கப்பட்டன. மேலும் பல அபிவிருத்திகளை எமது அரசு செய்தது.

நான் எப்போதும் உண்மையைப் பேசுபவன். நீங்கள் எங்களுக்கு வாக்களிப்பதன் மூலம் இன்னும் பல அபிவிருத்திகளையும் உங்கள் பிரதேசங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

நான் கிழக்கு மாகாண சபையிலும் முன்னாள் அமைச்சராக இருந்து இம் மாகாண மக்களுக்குப் பல சேவைகளை வழங்கியிருக்கின்றேன் - என்றார்.

## திரியாய் காட்டுப் பகுதியில் கரடி தாக்கி ஒருவர் படுகாயம்

திருகோணமலை - திரியாய் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் கரடி தாக்கி படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காட்டுப் பகுதிக்குள் விறகு வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்த போதே, கரடி தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தலை மற்றும் கண் பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் வயோதிபர் உடனடியாக குச்சவெளி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

குச்சவெளி - திரியாய் 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தசாமி தணிகாசலம் (60 வயது) என்பவரே படுகாயமடைந்துள்ளார் எனத் தெரியவருகிறது.

## 29 ஆம் திகதி திங்கள் முதல் தனியார் வகுப்புக்கள் ஆரம்பம்!

கொரோனா அபாயம் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட தனியார் கல்வி வகுப்புகள் இந்த மாதம் 29 ஆம் திகதி மீண்டும் தொடங்கும் என்று அனைத்து இலங்கை போதனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசு மற்றும் சுகாதாரத் துறையின் பரிந்துரைகளின்படி கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன என்று சங்கத்தின் ஊடகப் பிரிவின் தலைவர் திருஞ்சய கமலத் தெரிவித்தார்.

மாணவர்கள் ஒரு மீற்றர் இடைவெளியை பேணுவதுடன், முகக்கவசம் அணிவது கட்டாயமாகும் என்று கமலத் கூறினார்.

அத்துடன், வகுப்புக்களில் 500 மாணவர்களை உள்ளீர்க்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனுமதித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்

## அநுரகுமார சாட்சியம்

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க நேற்று முன்னிலையாகியுள்ளார்.

## பூசா தனிமைப்படுத்தலிலிருந்து 24 பேர் நேற்று வெளியேறினர்



பூசா கடற்படை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து தனிமைப்படுத்தலை நிறைவு செய்து மேலும் 24 பேர் நேற்று வெளியேறியுள்ளனர்.

அத்துடன் இதுவரை பூசா தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 357 பேர் வெளியேறியுள்ளனர் என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. மேலும் அங்கு 96 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலில் இருந்து வருகின்றனர்.

# மாணவனை அறைந்த அதிபருக்கு ஒத்திவைக்கப்பட்ட ஓராண்டுச் சிறை

அநுராதபுர - எப்பாவெலவில் மாணவனின் கன்னத்தில் அறைந்த பாடசாலை அதிபருக்கு, அநுராதபுர மேல்நீதிமன்றம் நேற்று ஒத்திவைக்கப்பட்ட ஓர் ஆண்டுச் சிறைத் தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எப்பாவெல பாடசாலையின் அதிபர், மாணவன் ஒருவரின் கன்னத்தில் தாக்கினார் என முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த அநுராதபுர மேல்நீதிமன்றம், பாடசாலை அதிபருக்கு ஐந்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

அத்துடன் மாணவனுக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறும், அதனை செலுத்த தவறின் மேலும் 6 மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாடசாலை அதிபரின் சேவைக்கு தாக்கம் ஏற்படாத வகையில், இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2020 இல் வெளியிடப்பெற்றது.




# தினம் ஒரு தலைப்பு

# சித்திரப்போட்டி



படம் 1
சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்



படம் 2
லனுஜன் நவரட்ணம் - தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'காற்றாலை'**

நேற்றைய தினம் அதிகளவானமாணவர்கள் 'மாட்டு வண்டி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத் தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ராமதாசன் ஹர்சிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

கு. கஜேஜாரிகா – தரம் 5
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஏ அக்ஷயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஆர். பிரிதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அஸ்ரிகா பைசர் – ஆரம்ப உயர்தரம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ச. பவிஷனா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

புனிதன் மதுமிஷியந்த் – தரம் 8
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஜெ. சஜுஜன் – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கி. துஷாந்த் – தரம் 8
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

ஏ. அனன்யா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

திலகராஜ் திலக்சயன் – தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

கே. நிருஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. சதுர்யா – தரம் 6
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

என். வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. ரிதீஷிதன் – தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

வி. சலோமி – தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

அத்வைதா ஹோபிநாத் – தரம் 1
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

கி. அஸ்வதா – தரம் 4
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

அன்றியா தக்ஷரா காண்டீபன் – தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikkathir
காற்றாலை




சித்திரப்போட்டி

**இன்று (27/06/2020) தலைப்பு**
**காற்றாலை**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**